# எழுத்தாளன்

தமிழ் எழுத்தாளர்களின் சொந்தப் பத்திரிகை

EZHUTHALAN WRITERS' OWN PUBLICATION

TAMIL & ENGLISH MONTHLY

FORMERLY THE WRITER

ஆசிரியர் அ.வெ.ர. கிருஷ்ணசாமி


NOV 1968

உலகமெனும் பெருவியப்பை
உலகில் மாந்தர்
உயிர்வாழத் துடிக்கின்ற
முனைப்பில் தோன்றுங்
கலகத்தைச், சிறுபிணக்கைக்
காதல் என்னும்
கவினுரும் இன்பத்தைக்
கூடி வாழும்
நிலைபேற்றை நிதம் ஆய்ந்து
ஆய்ந்து மற்றும்
நினைவயர்ந்து குமைகின்ற
மானுடத்தின்
குலமுயரக், குணமுயரக்
கொடிதான் ஏந்துங்
குறிகொண்ட எழுத்தாளர்
ஓர் குலத்தார்.

கனவு 11 கற்பனை 11] திருச்சி 15—11—68 [ தனிப் பிரதி 25 காசு

# ஸ்ரீ பகவத் த்யாந ஸோபாநம்

மூலம்: ஸ்ரீநிகமாந்த மஹா தேசிகன் — தமிழாக்கம்: சக்திசரணன்.

அந்தர் ஜ்யோதி: கிமபி யாமிநா
மஞ்ஜநம் யோக த்ருஷ்டே:
சிந்தா ரத்நம் ஸுலப மிஹ ந:
ஸித்தி மோக்ஷாநு ரூபம் |
தீநாநாத வ்யஸநசமநம் தைவதம்
தைவதாநாம்
திவ்யம் சக்ஷு: ச்ருதி பரிஷதாம்
த்ருச்யதே ரங்கமத்யே ||

மகிழ்கின்ற யோகியர்க்குச் சோதி யாகி
மலர்ஞானக் கண்ணிக்கு மையா யாகி
இகழ்வின்றி நமக்கெல்லாம் இருமைப் பேறும்
இவ்வுலகில் தருசிந்தா மணியா யாகிப்
புகழ்கின்ற மறைகளுக்கு விழியா யாகிப்
புகலில்லார் திறனில்லார் துயரம் போக்கித்
திகழ்கின்ற தேவர்க்குத் தேவாம் ஒன்று
திருவரங்கத் திடைநடுவே தெரிந்த தன்றே!

வேலாதீத ச்ருதி பரிமளம்
வேதாஸாம் மௌலி ஸேவ்யம்
ப்ராதுர்ப் பூதம் கநக ஸரித:
ஸைகதே ஹம்ஸ ஜுஷ்டே |
லக்ஷ்மீ பூம்யோ: கரஸரஸிஜைர்
லாலிதம் ரங்கபர்த்து:
பாதம் போஜாம் ப்ரதிபலதி மே
பாவநா தீர்க்கிகாயாம் ||

முன்னமுறு பிரமர்தம் முடிமே லூற்று
மொழிவரம்பு கடந்தமறை மணத்தை வீசி
அன்னமகிழ்ந் துறைகின்ற பொன்னி யாற்றில்
அழகறலார் மணற்றிட்டின் மிசையே தோன்றும்
மன்னுமெழிற் றிருமங்கை பூமிமங்கை
மலர்க்கரங்கள் கொடுவருடும் அரங்கச் செல்வன்
பொன்னடிச் செந்தாமரைகள் அடியேன் நெஞ்சப்
பொய்கையிலே உருக்காட்டிப் பொலியு மம்மா!

சித்ரா காராம் கடகருசிபி:
சாருவிருத்தாநு பூர்வாம்
காலே தூத்ய த்ருததர
கதிம் காந்தி லீலா களாசீம் |
ஜாநுச்சாயா த்விகுண
ஸுபகர்ம் ரங்கபர்த்துர் மதாத்மா
ஜங்காம் த்ருஷ்ட்வா ஜநந
பதவீ ஜாங்கி கத்வம் ஜஹாதி ||

கழல்மணிகள் ஒளிதரப் பன்னிறமு மெய்திக்
கவின்பொருந்திப் பொருத்தமுறத் திரண்டுருண்டே
எழில்முகக்கும் கலமாகி முழந்தா ளேரால்
இரட்டுகிற அழகுற்றுத் தூதுபோகும்
பொழுதினிலே மிகவிரைந்த நடைமேற் கொள்ளும்
பென்னரங்கன் [1]முன்காலைக் கண்ணுற் கண்டவ்
வழிபிறவி வழியினிலே [2]முன்கால் தேய
அலைதுயரம் நீங்கியதே அடியேன் ஆன்மா!

(பிரதிபாடம்) (1) கணைக்காலை (2) கணைக்கால்.

காமாராம ஸ்த்திர கதளிகா
ஸதம்ப ஸம்பாவ நீயம்
க்ஷௌ மாச்லிஷ்டம் கிமபி
கமலா பூமி நீளோபதாநம் |
ந்யஞ்சத் காஞ்சீ கிரணருசிரம்
நிர்விசத்யூரு யுக்மம்
லாவண்யௌக த்வயமிவ மதிர்
மாமிகா ரங்க யூந : ||

மன்மதனார் தோட்டத்து வாழை போன்று
வனப்புடனே பொன்னாடை போர்த்துக் கொண்டு
பொன்மகளும் புவிமகளும் பின்னை தானும்
பொருந்திமகிழ் தலையணையாய் நாலுகின்ற
மின்மணிமே கலையொளியால் வனப்பை எய்தி
வியப்பளிக்கும் இரட்டையெழில் வெள்ள மாகும்
நன்மைபுரி திருவரங்கச் செல்வக் காளை
நறுந்தொடையில் என்மதிதான் பதிந்த தன்றே!

ஸம்ப்ரீணாதி ப்ரதிகலம ஸௌ
மா நஸம் மே ஸுஜா தா
கம்பீரத் வாத் க்வசந ஸமயே
கூட நிக்ஷிப்த விச்வா |
நாளீகேந ஸ்ப் புரித ரஜஸா
வேத ஸோ நிர்மி மாணா
ரம்யாவர்த்த த்யுதி ஸஹசரீ
ரங்க நாதஸ்ய நாபி : ||

உயர்வுறுநற் றேற்றமுற்றுள் ளகன்று மாறான்
றுறுங்காலை உலகமெலாம் மறைத்துள் வைக்கும்
இயல்புடனே பூப்பெய்துமட்டு மரையின் மேலாம்
இனியமறை பிரமரெனும் மக்க ளீன்று
பயிலொழுங்கில் சுழலுறும் பாங்கிதனோ டொன்றும்
பண்புடைய திருவரங்கப் பெருமான் உந்தி
அயர்வின்றி நொடிக்குநொடி அடியேன் நெஞ்சை
அமுதநிகர் மகிழ்ச்சியினுள் ஆழ்த்து மன்றே!

ஸ்ரீவத்ஸேந ப்ரதித விபவம்
ஸ்ரீபத ந்யாஸ தந்யம்
மத்யம் பாஹ்வோர் மணிவரருசா
ரஞ்ஜிதம் ரங்கதாம் ந : |
ஸாந்த்ரச் சாயம் தருண துளஸீ
சித்ரயா வைஜயந்த்யா
ஸந்தாபம் மே சமயதி திய :
சந்த்ரிகோதார ஹாரம்.

திருமகளின் திருவடிசார் பேற்றை எய்திச்
சீர்த்திபுகல் ஸ்ரீவத்ஸ மறுவைத் தாங்கிக்
குருமணியாம் கௌத்துவத்தின் செம்மை யுற்றுக்
குளிர்நிலவார் எழில்முத்துத் தாமம்சார்த்தி
மருவுறுபைந் துவளத்தால் பன்னிறங்கொள்
வைஜயந்தி தருங்குளிர்ந்த வனப்பைப் பெற்றுப்
பருத்தபுயத் திருவரங்கன் பரந்த மார்பு
பரவடியேன் மனத்தேக்கம் போக்கிற் றன்றே!

ஏகம் லீலோபஹித மிதரம்
பாஹு மாஜாநுலம்பம்
ப்ராப்தா ரங்கேசயிது ரகில
ப்ரார்த்தநா பாரிஜாதம் |
த்ருப்தா ஸேயம் த்ருட நியமிதா
ரச்மிபிர் பூஷணாநாம்
சிந்தா ஹஸ்திந் யநுபவதிமே
சித்ரமாலாந யந்த்ரம் ||

பணிவுறுவோர் தமக்கெல்லாம் பாரி ஜாதப்
பண்புடைய திருவரங்கம் பள்ளி கொண்ட
மணிவண்ணன் தலையணையாய் விளையாட்டாக
மடித்துவைத்த திருக்கரமும் முழந்தாள் மட்டும்
தணிவுடைய இடக்கரமும் பிடித்துச் சொக்கித்
தருக்கியுள என்சிந்தைப் பிடியே தானும்
அணிவிளங்கும் ஒளிவடத்தால் பிணிக்கப் பெற்றே
அற்புதமாம் அத்தறியில் மகிழ்தல் என்னே!

ஸாபிப்ராய ஸ்மித விகஸிதம்
சாரு பிம்பாதரோஷ்ட்டம்
து : க்காபாய ப்ரணயிநி ஜநே
துர தத்தாபிமுக்க்யம் |
காந்தம் வக்த்ரம் கநக
திலகாலங்க்ருதம் ரங்கபர்த்து :
ஸ்வாந்தே காடம் மம விலகதி
ஸ்வாகதோதார நேத்ரம் ||

பொருளுடைய புன்னகையே பூத்து நிற்கும்
பொலிவுடைய கொவ்வைவாய் இதழ்களோடும்
இருளுடைய துயர்களையும் விருப்பினோரை
எதிர்கொள்ள நெடுந்தொலைகாண் நோக்கி னோடும்
அருளுடனே வருகவென அழையா நிற்கும்
அமுதொழுகு கண்ணோடும் அரங்கத் தம்மான்
திருவுடைய பொற்றிலக வனப்போ டுற்ற
திருமுகமென் நெஞ்சாழப் பதிந்த தன்றே!

மால்யை ரந்த : ஸ்த்திர பரிமளைர்
வல்லபா ஸ்பர்ச மாந்யை :
குப்யச் சோளீ வசநகுடிலை :
குந்தலை : ச்லிஷ்ட மூலே |
ரத்நா பீட த்யுதி சபளிதே
ரங்கபர்த்து : கிரீடே
ராஜாந்வத்ய : ஸ்த்திதி மதிகதா
வ்ருத்தயச் சேதஸோமே ||

மனங்கொண்ட பிராட்டியர்கை நேர்த்தி பெற்று
மாலைகளால் உண்ணிலைத்த மணத்தைக் கொண்டு
சினங்கொண்ட சோணாட்டு மடவார் பேச்சுத்
திறம்போலச் சுருண்டகருங் குழலின் மீதே
இனங்கொண்ட மணிவிளங்கு சென்னி மாலை
ஏரொளியால் பன்னிறங்கொள் அரங்கச் செல்வன்
கனங்கொண்ட திருமுடியைக் கண்டென் னெண்ணம்
காவலனைப் பெற்றனவாய் நிலைத்த வம்மா!

(கடைசி பக்கம் பார்க்க)

எழுத்தாளன்

கனவு 11] கீலக, கார்த்திகை (15-11-68) [கற்பனை 11

# மனச்சுமை

உழைப்பு இல்லாமல் சேர்க்கப்பட்ட செல்வம், அலட்சியம் ஏற்படுத்தி தன்னையே அழித்துக்கொண்டு விடும்.

பிறரை வேதனைப்படுத்தி சேர்க்கப்பட்ட செல்வம், வேதனை ஊற்றை ஏற்படுத்திவிட்டு, வேதனையை எச்சமாக வைத்துவிட்டு அழிந்துபடும்.

மனிதன் இன்பத்தைத் தேடுகிறான். அந்த இன்பத்தை இன்பமாகத்தான் பெறவேண்டுமென்ற ஞானம் இல்லாமல் போய்விடுகிறது.

மனிதன் துன்பத்தைக் கண்டு அஞ்சுகிறான். ஆனால் அவன் துன்பத்தை தானே சிருஷ்டித்துக்கொண்டிருக்கிறான் என்பதை மட்டும் ஏனோ புரிந்துகொள்ள மறுக்கிறான்.

வேதனை, வேதனை என்று வெம்புகிறான். இவன் பிறப்பே வேதனை, வளர்வும் வேதனை, வாழ்வும் வேதனை, முடிவும் வேதனை என்பதை நம்ப மறுக்கிறான்.

மனிதன் வேதனையில் பிறந்தவன். வேதனையில் வளர்பவன். வேதனையை இன்பமாக்கி தானும் இன்பமடைந்து பிறரையும் இன்பமாக வாழவைக்க இயற்கை நியதி அவனுக்கு பயிற்சிக்கூடமாக வேதனையை உருவாக்கித் தந்திருக்கிறது.

சிலர் வேதனையை விலை கொடுத்து வாங்குபவர் இருக்கிறார்கள். சமூக சேவை செய்பவர்களும், இலக்கிய ரசனை உடையவர்களும், பக்தர்களும், சித்தர்களும் வேதனையை விலை கொடுத்து வாங்குபவர்களாக இருக்கிறார்கள்.

உலகத்தார் செய்த பாபமெல்லாம் தான் செய்ததாக எண்ணி தன்னை ஆத்மஜோதியில் வாட்டுகிறவர்கள், தன்னிடமிருக்கும் செல்வத்தையும், தனது நேரத்தையும் சமூக மேம்பாட்டுக்குத் தந்து பரோபகாரம் செய்பவர்கள், பிறர் வாழ தம் சித்தக்கடல் மூழ்கி முத்தை எடுத்துவரும் சிந்தனையாளர்கள், வேதனையை விலைகொடுத்து வாங்குகிறவர்கள்.

வேதனை இல்லாவிட்டால் சோம்பல் மலரும். உழைப்பிலே உற்சாகம் இருக்காது. அறிவு மலராது. ஆண்மைக்கும், தியாகத்திற்கும், பரோபகாரத்திற்கும், இலக்கியத்திற்கும், ஏன் பக்திக்கும்கூட அவை தோன்றுதற்கு வேதனையே காரணமாகும்.

மனதை தேடி அறியவேண்டிய மனிதன் மற்றதைத் தேடி அலைகிறான். அங்கு வேதனை பிறந்துவிடுகிறது. அந்த வேதனையிலிருந்து மனிதனை உயர்நிலைக்குக் கொண்டுவர வேதனைப்பட வேண்டியிருக்கிறது.

வேதனை இருவகைப்படும். தனக்காகப் படும்வேதனை ஒரு வகை, சமுதாய நல்வாழ்வுக்காக வேதனைப்படுவது மற்றொரு வகை.

மனிதன் உள்ளதை உள்ளபடி உணராததாலே அறியாமை பிறக்கிறது. அறியாமை அதிகரிக்க, ஆசையும், ஆணவமும் அகங்காரமும், இவ்வாறு ஒன்றிலிருந்து ஒன்றாக ஓராயிரம் தொல்லைகள் உருவாகின்றன.

அறிவில்லாதவனுக்கு அனுபவ நூல்கள் சுமையாகும். உண்மையான ஞானமில்லாதவனுக்கு உடலே ஒரு பெருஞ்சுமையாகும். நேர்மை வழி நில்லாதவனுக்கு நடுநிலைமை என்பது சுமையாகும். ஒழுக்கமில்லாதவனுக்கு மரபு என்பது மானடக்கேடாகத் தோன்றும். சாந்தமில்லாதவனுக்கு மனமே பெருஞ் சுமையாகும்.

மனச்சுமை அதிகரித்தால் ஆயுள் அடங்கும், கோபம் பிறக்கும். இருதயம் நின்றுவிடும், இந்நிலை மனிதனே ஏற்படுத்திக்கொள்ளுகிறான். அறிவில்லாமல் ஆசையைப் பெருக்கப் பெருக்க மனச்சுமை அதிகரிக்கிறது.

அன்று முதல் இன்றுவரை உலகில் ஏற்பட்ட இலக்கியங்கள் பக்தி நூல்கள், அனைத்தும் இந்த மனசுமையை மனிதன் இறக்கிவைக்க உபாயங்கள் கூறுவதாகவே அமைந்திருக்கின்றன.

உலகத்திற்கெல்லாம் ஒரே சூரியன், ஒரே சந்திரன் என்பதுபோல உலகத்தோர் கவலையும் ஒன்றுதான்.

மனச்சுமை தீர மருந்து தேடும் முயற்சிதான். அது விஞ்ஞானமாக இருந்தாலும் சரி, மெஞ்ஞானமாக இருந்தாலும் சரி மனச் சுமை தீரவேண்டும்.

மனமானது ஆகாயத்தைப் போன்று உருவமில்லாதது. எங்கும் பரந்து நிற்பது. எல்லாவற்றையும் தன்னுள் அடக்கி வைத்திருப்பது. என்றும் அழிவில்லாதது. தன்னை அறிந்து அண்டியவர்களுக்கு கற்பகத் தருவைபோல் விரும்பியதெல்லாவற்றையும் தரவல்லது.

மனிதன் சரீரத்தில் உச்சி முதல் உள்ளங்கால் வரை எந்த இடத்தில் இருக்கிறது என்று எவரும் இதுவரை திட்டமாக சொல்ல முடியாததாக இருப்பது மனம்.

புதிதாக செல்வம் படைத்தவன் அதனை யாராவது எடுத்துக்கொள்வார்களோ என்று அச்சமுற்று நேரத்திற்கு நேரம் ஒரு இடத்தில் பதுக்குவதும், பின் எடுத்து வேறு இடத்தில் பதுக்குவதும் செய்வதுபோல மனம் நில்லாது சுழன்று வட்டாடுகிறது.

ஆசையோ, இலட்சியமோ, களங்கமோ இல்லாமல் மனதை அதன் இயல்பறிந்து இடமறிந்து வயப்படுத்தி அதன் அளவற்ற ஆற்றலை வையகத்திற்கு வழங்கும் உபகாரிகள் சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள் ஆவார்கள்.

இவர்கள் வயப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டதால் உலக இயலில் வேதனை அனுபவித்தாலும், அது வேதனையாக இல்லாமல், அனுபவமாக, பிறருக்கு வழிகாட்டும் அறிவொளியாக, முடிவில் ஆனந்தமாகவும் அமைகிறது.

மனித வாழ்வு மேன்மையுற நல்ல எண்ணங்களை மனத்தில் வைத்து, தீய எண்ணங்களை மனதாலும் நினைக்காது ஒதுக்கி அன்பு உணர்ச்சியோடு மனிதகுலம் செயல்படும் போது புல்லிலே வைரப்படை தோன்றும், பூதலத்தில் பராசக்தியும் தோன்றுவாள் என்கிறார் சக்திதாஸர் பாரதி. பாரதியின் கனவு நனவாக்க முயற்சிப்போம் வாருங்கள்.

அ. வெ. ர. கிருஷ்ணசாமி.

# ஜீவ காந்தா

—[எஸ். ஜி. இராமானுஜலு நாயுடு]—

(சென்ற மாதத் தொடர்ச்சி)

தீர்ப்பை கேட்டதும் ஜீவானந்தம் மூர்ச்சையாய் விழுந்தான். மாதவன் ஓ! அண்ணு என்று கதறினன். கோர்ட்டு முழுவதும் அழுகை மயமானது. பிறகு ஹைகோர்ட்டில் அப்பீல் செய்ய, கேசவரின் கண்யமான அந்தஸ்தை உத்தேசித்து ஏழு வருஷ கடின சிக்ஷையை ஆறு வருஷ வெறுங் காவலாக மாற்றினர். கோவிந்தன் இவற்றையெல்லாம் கவனித்திருந்து சில தீர்மானங்களைத் தனக்குள் செய்துகொண்டு சென்ருர்.

தலைமைக் குமாஸ்தா கிருஷ்ணமாச்சாரிமுன்போல்நாகப்பட்டணத்திற்கே மாற்றப்பட்டதால், கேசவரின் குடும்பத்தைத் தன் மேற்பார்வையில் வைத்துக்கொண்டு கவனிக்கத் தொடங்கினுர். ஜீவானந்தத்தைச் சென்னையில் வாசிக்க அனுப்பிவிட்டார். குமுதவல்லியம்மாளிடம் தன் மனைவி, தாயார் முதலியவர்களை அனுப்பித் தேறுதல் சொல்லும்படி செய்து வந்தார்.

கேசவருடைய தர்மங்களென்ன; அவருடைய பரோபகரமான குணங்களென்ன; அவருக்கா இப்படி வந்து சம்பவிக்கவேண்டும்? ஒரு பிடி அரிசி பிச்சையிடுவதற்குப் பதிலாக ஒரு படி அரிசி போட்டு அனுப்பிய மகானுபாவர்கள்தான் பேர் ஊர் இல்லாமல் அழிந்துபோனுர்கள். அவர்களின் குடும்பங்கள்தான் திக்கில்லாமற் போய்விட்டன. எல்லா பந்துஜனங்களையும் சேர்த்துவைத்து ஆதரித்து உருவாக்கிவிட்டவனின் சவம்தான் மசானச் செலவுக்கும் வழியற்றுத் திண்டாடுகிறது அன்னதானம் செய்த இடங்களில்தான் அவதிகளைப் பகவான் காட்டுகிருர். பொல்லாங்கு செய்தவர்களையும், துரோகிகளையும், சுயநலப்புலிகளையும், வஞ்சகர்களையும் கடவுள் வெகு சுகமான வாழ்வில் வைப்பதும் விந்தையே! ஆனல், எதற்கும் ஒரு முடிவு இருக்கிறது. அந்த முடிவைக் கவனிக்கும்போது நன்மையே செய்தவர்கள் அடையும் கஷ்டங்கள் அவர்களின் பூர்வ வினையென்றும், துஷ்டர்கள் வாழ்வதெல்லாம் இன்னும் அவர்கள் அக்கிரமங்கள் எவ்வளவுக்குப் போகுமெனக் கணக்கிட்டுக் கடைசியில் அந்த அதமர்களைப் பகவான் ஒரேயடியாய் பாதாளத்தில் அழுத்திக் குலநாசம் செய்துவிடுகிருரென்பதும் அனுபவம்.

மாதவனுக்கு எப்போதுமே பணம் சேர்ப்பதிலேயே எண்ணமல்லவா? பெங்களூர் நாகபூஷண நாயுடுவுடன் சம்பந்தம் செய்துகொள்ள இப்போது தனது அண்ணு கேசவலுநாயுடு இல்லாததால் தன்னை எவரும் தடுக்க முடியாது என்று துணிந்துவிட்டான். முன்பு பெண் வீட்டுக்காரருக்கு வாக்குக் கொடுத்ததுபோல் விவாகத்திற்கு எல்லா ஏற்பாடுகளும் சித்தமாகச் செய்து சீதாபதியுடனும் சில பந்துக்களுடனும் தன் மனைவியோடும் புறப்பட்டு பெங்களூருக்குச் சென்ருன். முகூர்த்தத்திற்கு இரண்டு தினங்கள் இருக்கையில் மாதவனின் மனைவிக்குத் திடீரென்று பிளேக் கட்டி உண்டாகி எவ்வளவோ வைத்தியம் செய்தும் குணப்படாமல் முகூர்த்த தினத்தன்று இறந்துவிட்டாள். மணவீடு பிணவீடு ஆனது மாதவனின் துக்கம் சொல்லமுடியாது. கருமகிரியைகள் எல்லாம் ஆனபிறகு, மாதவன் மறுபடியும் விவாகத்தைப்பற்றி பிரஸ்தாபம் செய்தான். நாகபூஷணநாயுடு இரண்டு தடவையும் விவாகத்திற்குப் பிரயத்தனப்பட்டுத் தவறிப்போன இடத்தில் தன் குமாரத்தியைக் கொடுக்க முடியாதென்று கண்டிப்பாய்ச்சொல்லி மறுத்துவிட்டார். மாதவன் ஏமாற்றத்துடன் தஞ்சாவூர் வந்து சேர்ந்தான். மறுதினமே கும்பகோணத்திற்குச் சென்று அழகிரிசாமி நாயுடுவைப் பார்க்கப்போக, அவர் நீலகிரியில் புதிதாய் வாங்கியிருக்கிற பங்களாவைப் பழுது பார்ப்பதற்காகப் போயிருப்பதாய்த் தெரிந்தது. மாதவனும் சீதாபதியும் நீலகிரிக்குப் புறப்பட்டுப் போய் அவரைக்கண்டு சீதாபதியின் சுவீகார விஷயமாய் பேச, அதற்கு அவர் கேசவலு நாயுடு சிறையிருந்து திரும்பி வந்தபிறகு அவருடன் கலந்து பேசியே தெரிவிக்க வேண்டுமென்று கூறிவிட்டார். பெங்களூர் பெண் சங்கதியும், சீதாபதியின் சுவீகார சங்கதியும் ஏமாற்றமாய் முடியவே மாதவனுக்கும் சீதாபதிக்கும் உண்டான வருத்தமும் ஆத்திரமும் சொல்லிமுடியாது. பிறகு தஞ்சாவூருக்குத் திரும்பி வந்து, மதுரையிலே நாரதப்ப நாயக்கரின் மூத்த பெண் சாந்தம்மாள் என்ற பெண்ணைப் பார்த்து சீதாபதிக்கு விவாகம் செய்துவைத்தான். விவாகத்துக்கு ஜீவானந்தமும் குமுதவல்லியும் போய்வந்தனர். சீதாபதிக்குத் தஞ்சாவூரில் ஒரு பாங்கியில் ஐம்பது ரூபாய் சம்பளத்தில் ஒரு வேலையும் கிடைத்தது.

சென்னையில் வாசமாயிருந்த ஜீவானந்தன் தனக்கு ஒருநாள் மாலையில் கிடைத்த "ஹிந்து" பத்திரிகையைப் பிரித்துப் பார்க்கையில் பின்வரும் குறிப்பு ஒன்றை வாசித்தான்.

## ஒரு காதல் தவிப்பு

### யார் என்று தெரியவில்லை

நேற்றிவு மூன்று மணிக்குப் போலீஸார் யானைக்கெவுனி ரோட்டின் வழியாய்ச் சுற்றிக்கொண்டு வருகையில் தலையிலும் தேகத்திலும் சில காயங்களுடன் ஒருவன் பிரக்ஞையற்றுக் கிடப்பதைக் கண்டனர். அவன் வாயில் மதுவின் துர்க்கந்தம் அதிகமாயிருந்தது. காயங்களுக்குக் காரணம் தெரியவில்லை. அவனை ஜெனரல் ஆபத்திரியில் கொண்டு வந்து சேர்த்தனர். அவன் சட்டைப் பையில் அகப்பட்ட டைரியின் சில பக்கங்களில் பின்வருமாறு இருந்தது.

I

"நாளுக்கு நாள் அதிகமாய் அவளை காதலித்தேன். இச்சரீரத்தை அலங்கரித்து அவளிடம் கொண்டுபோய், அவள் அதை அணைத்துக் கொஞ்சுவதைக் காண எண்ணினேன். ஒவ்வொரு தடவையும் நேசமாய்ப்பேசி என் குடும்பரகசியங்களை அறியவிரும்பினுள். நான் எதை மறைக்கிறேனே அதையே நோண்டி நோண்டிக் கேட்கிருள். நான் அவள் கேட்ட கடைசி கேள்விக்குப் பதில் சொல்லவில்லை: அது சொல்லக் கூடாத பெரிய விஷயம்.

II

அவளுடைய கடைசி கேள்விக்கு நான் பதில் சொல்லாததால் இனி தன்னிடம் வரவேண்டாம் என்று கண்டித்துப் பேசினுள். ஆடவர்கள் தங்களின் கைபடாத பெண்களிடத்தில் வைத்துள்ள மரியாதையும் அன்பும் பற்றுதலும் — தங்களால் வஞ்சகமாகக் கெட்டழிந்த பெண்களிடம் வைப்பதில்லை என்ருள். காமிகளுடைய சத்தியத்தின் சுத்தமும், சாக்கடை ஜலத்தின் சுத்தமும் இரண்டும் ஒன்றுதானுகையால் – இனி இந்தப் பக்கமே எட்டிப்பார்க்கக் கூடாதென்ருள். மன்ருடினேன், கெஞ்சினேன் என் காதலுக்கு ஒப்பினையில்லை சந்தோஷமாகிய சிறு படகு கண்களுக்கு தென்பட்டும் அலைகள் அதைக் கரையைச் சேரவொட்டாமல் தடுக்கின்றன போலும்!

என்று எழுதியிருந்தது. அந்த மனிதனை மூர்ச்சை தெளிந்த பிறகு விசாரித்ததில் அவன் எதுவும் தெரிவிக்கவில்லை. தன்னை அடித்தவர்கள் இன்னுரென்றுகூட தெரியாதென்ருன். இன்று பகல் பதினெரு மணிக்கு அவனை ஆஸ்பத்திரியிலேயே காணவில்லையாம். பைத்தியமும் உண்டென்று சொல்லப்படுகிறது. அவன் டைரியும் அதிலிருந்த அவன் படமும் போலீஸார் வசமிருக்கின்றன.

(தொடரும்)

# எந்தையே! ஆராவமுதே!

ஏ. எஸ். ராகவன்.

சேலம் மாவட்டம் பெரிதும் வரண்ட நிலப் பரப்பையே கொண்டதாயினும் அதன் தெற்கு எல்லையில் காவேரியின் மருங்கில் மிகச் செழிப்பான நிலப் பகுதியும் உண்டு. அந்தப் பகுதியில் நஞ்சை நிலங்கள் ஏகர் முப்பதாயிரத்துக்கு மேல் விலை போவது சர்வ சாதாரணம். வெற்றிலை, கரும்பு, நெல் இவை பிரதான சாகுபடி. வெற்றிலை வடக்கே பம்பாய், கல்கத்தா, டெல்லிக்கு ஏற்றுமதியாகிறது. பதினைந்து நாட்கள் ஆனாலும் இந்த வெற்றிலை வாடாது, பழுக்காது. எனவே இதற்கு வடக்கில் கிராக்கி மிகுதி.

இப்பகுதியில்தான் புதுப்பாளையம் என்னும் எங்கள் பூர்வீக கிராமம் அமைந்திருக்கிறது. சர்க்கார் ஏட்டில் இந்த ஊருக்குப் 'பொத்தனூர்' என்ற நாமதேயம். இவ்வூரின் நஞ்சைப் பகுதிகளுக்கு "தேவராய சமுத்திரம்" என்று பெயர். ஆக, இரண்டு கணக்குப் பிள்ளைகள், இரண்டு கிராம முனுசீபுகள் உள்ள பெரும் கிராமம்–சிறு நகரம் – இது. ஒரு உயர்நிலைப் பள்ளி, தபால் தந்தி அலுவலகம், இரட்டை வாய்க்கால்கள், ஏராளமான நிலத் தகராறுகள், இத்தனைக்கும் ஈடு கட்டும் பரம பாமரமான வெகுளித்தனம் – எல்லாமும் உண்டு.

இவ்வூரின் அக்ரஹாரம் ஊரின் மேற்குப் பகுயில வாய்க்காலை ஒட்டி அமைந்திருக்கிறது. இடை இடையே சில குட்டிச் சுவர்களையும் சேர்த்து மொத்தம் நாற்பது வீடுகள் தேறும். இந்த அக்ரஹாரத்தில் வடுவூரார் குடும்பம் தொன்மை வாய்ந்தது. தஞ்சை மாவட்டத்து வடுவூரைச் சார்ந்த எங்கள் தாத்தா இந்த ஊரை சுவீகரித்துக்கொண்டார். எனவே அந்தப் பெயர் வழங்கலாயிற்று.

எங்கள் அப்பா ஆராவமுத அய்யங்காருக்கு இரண்டு சகோதரர்கள், ஒரு சகோதரி. அப்பாதான் கடைக்குட்டி. செல்லப்பிள்ளை. இளமையில் கர்லா, பஸ்கி, சிலம்பாட்டமெல்லாம் கற்றிருக்கிறார். ஒரு தடவை வீட்டிற்குள் நுழைந்த திருடர்களை தனி ஆளாகவே நின்று சிலம்பாடி விரட்டி அடித்திருக்கிறார். பயம் என்பது அவர் அறியாதது. கவலை என்பதும் அவர் அறியாதது. எதற்கும் எப்போதும் அஞ்சமாட்டார். "எல்லாம் அவன் விருப்பப்படி நடக்கும். நாம் செய்ய என்ன இருக்கிறது?" என்கிற வேதாந்த பரமான நோக்கம் கொண்டவர்.

அப்பாவின் இளமைக்கல்வி ஸ்ரீரங்கத்திலும், திருச்சியிலுள்ள ஜோசப் கல்லூரியிலும் நிகழ்ந்தன. கல்லூரிப் படிப்பு முடியும் முன்பே தாத்தாவுக்குக் கண்பார்வை மங்கி விட்டதால், நிலபுலன்களைப் பார்த்துக்கொள்ள வேண்டுமென்கிற பொறுப்பை ஏற்று கிராமத்துக்குப் போய்விட்டார். அதன் பிறகு எந்த உத்தியோகத்தை நாடியும் அவர் போகவில்லை. எவருககும் தலை வணங்கவில்லை.

ஒரு பெரிய குடும்பத்தின் பொறுப்புகளை ஏற்று, கடமைகளை ஆற்றி வரும் போது தன் பங்குக்குரிய சொத்துக்களை ஈடுபடுத்தி அவற்றை நிறைவேற்ற அப்பா தயங்கவில்லை. எனவே சீக்கிரமே கடன் தொல்லைகளுக்கு ஆட்பட்டு நின்றார்.

1924-ல் வந்த காவேரி ஆற்று வெள்ளம் எங்கள் குடும்பத்தைப் பெரும் சோதனைககு ஆளாக்கியது. விளைவு முற்றும் அழிந்துபோயிற்று. ஆயினும் தான் கொடுத்த வாக்குப் படி குத்தகையை மறுக்காமல் தர முனைந்தார் அப்பா. கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதே வாழ்வின் தலையாய லட்சியம் என்பது அவர் கடைப்பிடித்த கொள்கை.

நாங்கள் ஆறு பிள்ளைகள், மூன்று பெண்கள் அவருடைய வாரிசுகள். மூத்த மனைவியின் குமாரர்கள் இருவர், இரண்டாவது மனைவியின்மூலம் மற்றவர்கள். இவ்வாறு ஒரு பெரும் குடும்பத்தின் தலைவராக அப்பா விளங்கி வந்தார்.

அவருக்கு வைத்தியத்தில் நல்ல தேர்ச்சி உண்டு. ஆங்கில மருத்துவம் அவருக்குப் பிடிக்காது. அவரே ஒரு சூரணம் தயார் செய்வார். அதைத் தயாரிக்க சுமார் ஒரு மாத காலம் ஆகும். பலபடியாக மூலச் சரக்குகளைப் பக்குவப் படுத்தியும், ஊற வைத்தும், காய வைத்தும் இடிக்கவேண்டும். அந்தச் சூரணத்தில் ஒரு சிட்டிகை சாப்பிட்டால் பாதாதி கேசம் ஒரு விரு விருப்பும், சொடுக்கி விட்டாற்போல ஆயாசத் தெளிவும் உண்டாகும். ஒரு வகைக் களிம்பும் அவர் தயாரிப்பார். பித்தளைத் தாம்பாளத்தில் இட்டு கலுவத்தில் அரைப்பதுபோல் பல நாட் அரைத்து அந்த களிம்பைத் தயார் செய்வார். ஆருத புண்களெல்லாம் ஆறும் அதை உபயோகித்தால். மாடுகளுக்கு ஒரு வகைப் புண் ஏற்பட்டு, புழுக்கள் ஊறி வருத்துவதுண்டு. ஒரு பச்சிலையை அப்பா வைத்துக் கட்டுவார். பொல பொல வென்று புழுக்களெல்லாம் கீழே விழுந்து புண் மாயமாய் ஆறும்.

அப்பாவின் தெய்வ பக்தி படாடோபம் இல்லாதது. அநாவசியமான ஆசாரங்களை அவர் கடைப்பிடித்ததில்லை. தினசரி விஷ்ணு ஸஹஸ்ரநாமம் பாராயணம் செய்ய அவர் தவறியதில்லை. மனத் தளவில் தூய்மை இல்லாமல் உடல் தூய்மையும் பொய்மைவேடமும் அர்த்தமற்றவை என்பது அவர் கோட்பாடு. குடும்பத்தில் கூட ஆஹா, ஊஹூ என்று ஈடுபாடு காட்ட மாட்டார். எங்களை அவர் அத்துமீறிக் கொஞ்சியதுமில்லை. சினந்துதிட்டியதுமில்லை, ஒரு தடவை கூட அடித்ததில்லை. எங்களை எங்கள் போக்கில் வளர விட்டு, காவலுக்கு மட்டுமே அவர் எட்ட நின்றிருந்தார்.

வறுமை பல காலம் அவரை வாட்டிற்று. அப்போதெல்லாம் கூட விருந்தோம்பல் குறையாது வீட்டில். யாரையாவது அழைத்துக் கொண்டு வந்து நிற்பார். 'வீட்டில் அட்சய பாத்திரம் இருப்பதாக நினைப்பு போலிருக்கிறது!' என்று எங்கள் அம்மா கடிந்த போதும், 'சரி. சரி, இருப்பதைப் போடு... சாப்பிட்டுவிட்டுப்போகிறோம்,' என்பார். எந்த ராஜா எந்தப் பட்டணம் போனாலும், வேளா வேளைக்கு காபி தவறக்கூடாது. அது இல்லையோ; அவருக்குக் கோபம் வந்து விடும். கோபம் வந்தால், யாரோடும் பேசாமல் வாசல் திண்ணையில் போய் உட்கார்ந்து விடுவார். பிறகு வருந்தி அழைத்தால்தான் உபவாசம் கலையும்!

அப்பாவுக்கு சீட்டாட்டத்தில் பிரியம் மிகுதி. எங்கள் வீட்டின் முன் வாயிலில் பிற்பகல்களில் சீட்டாட்டம் தவறாது நடக்கும். ஒரே சத்தமும், கேலியும், கூத்தும்தான். ஓயவே ஓயாது. சில சமயம் அடிதடி சண்டை

போல யுத்தமே நடக்கும். தொடர்ந்து சிரிப்பொலி பிய்த்துக்கொண்டு போகும். அப்பாவிடம் சீட்டாட்டத்தில் 'ஆசீர்வாதம்' பெற விரும்பி அவரைச் சீண்டி, கோபமூட்டுகிற வர்க்கமும் எங்கள் ஊரில் உண்டு. அவருடைய கோபம் ஆட்டத்தில் சூட்டை ஏற்றும். அவ்வளவுதான்.

எழுபது வயதுக்கு மேல் தான் பற்கள் தளர்ந்தன அவருக்கு. ஆனாலும் நடை தளரவில்லை. கடைசிவரை அவர் கோல் பிடிக்கவே இல்லை. பார்வைகூடத் தளரவில்லை. எங்களுக்குத் தெரிந்து அவர் கண்ணாடி அணிந்திருந்த காலம் — படிப்பதற்கு மட்டும் — மிகமிகச் சொற்பம். கதைகளை, நாவல்களை விரும்பிப் படிப்பார். சினிமாமட்டும் பிடிக்கவே பிடிக்காது. 'காசைக் கொண்டு போய் சினிமாவிலே ஏன் அழவேண்டும்?' என்பார். எப்போதும் தக்ளியில் நூல் நூற்றுக்கொண்டிருப்பார். தமக்கு வேண்டிய பூணூலை தாமே தயாரித்துக்கொள்வதில் விருப்பம். குழந்தைகளோடு குழந்தையாக தாயக் கட்டம் ஆடுவார். எந்த ஆட்டத்திலும் தம் கட்சி ஜெயிக்கவேண்டும் என்கிற வேகம் காட்டுவார்.

அப்பாவுக்கு சூதுவாது தெரியாது. யாரையும் நம்பிவிடுவார். அதனால் பெரிதும் நஷ்டங்களையும் சோதனைகளையும் ஏற்றுக்கொண்டிருந்திருக்கிறார். எனினும் வேதாந்தி ஆனதால் அவற்றைப் பொருட்படுத்தியதில்லை.

அப்பா இப்போது மறைந்துவிட்டார். எழுபத்து எட்டு ஆண்டுகள் வாழ்ந்து, ஒரு முக்கல் முனகல் இல்லாமல், சுலபமாக மரணத்தைத் தழுவிவிட்டார். மாசு மருவற்ற அவரது சடலத்தைப் பார்த்தபோது இறந்துவிட்டாரென்றே நம்ப முடியவில்லை. இந்த ஐப்பசியிலும் அவரது இறுதிச் சடங்குகளுக்காக வானமே வழி விட்டது போல் பதினைந்து நாட்கள் மழை பெய்யாதிருந்தது. காரியங்களைச் செய்ய அவரது ஆசீர்வாதத்தால் போதிய பண பலமும், மன பலமும், உறவினர் உபகாரங்களும் வாய்த்தன.

அப்பாவின் நினைவுக்கு அஞ்சலி கூறுகிறோம். அவர் எங்களை எப்போதும் போல் சூக்கும உருவிலிருந்து வழி நடத்துவாராக! நாங்கள் அவருடைய நல்ல பிள்ளைகளாக இங்கே வாழ முற்படுவோமாக!

—

# எட்டயபுரம் கவிஞர்களும் கலைஞர்களும்
# ராசா கலைஞர்கள்

கி. முத்துராமகிருஷ்ணன்.

## 12. ராஜஜெகவீர குமார எட்டப்பன்

கம்பன் இலங்கை நாட்டின் வளத்தையும் களிப்பையும் காட்டுகின்ற போது சொல்லின் செல்வன் அனுமன் வாயிலாக

களிக்கின்றார் இன்றி கவல்கின்றாரைக் காணேன் என்றார். அதே நிலைதான் எட்டயபுரத்திலும். கலையின் நிலை உயர நறுமணம் கமழ நாட்டில் எத்தகைய குழப்பமும் குமுறலும் இருத்தல் கூடாது. அமைதியான சூழ்நிலையில் தான் கலை வளரும், வளரவும் முடியும். வளர்க்கவும் முடியும்.

ராஜஜெகவீர ராமகுமார எட்டப்ப மகாராஜா என்று பெயர் பெற்ற மன்னர் 13-11-1868 அன்று பட்டம் பெற்றார். அன்றே தமிழும் களிநடம் புரிந்தது. இவர்கள் தமிழ் தெலுங்கு ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் வல்லுனர். இவர்கள் காலத்தில்தான் சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான முத்துசாமி தீட்சதரின் உடன் சகோதரர் சுப்பராம தீட்சதர் அவர்கள் இங்கு ஆஸ்தான குருவாக இருந்தார். இவர் கடிகை நமசிவாய புலவர் எழுதிய வல்லி பரதம் என்ற நாட்டிய நாடகத்திற்கு வர்ண மெட்டுகளும் முத்தாய்ப்பு சுரங்களும் செய்து 1880 மார்ச்சு மாதம் இந்த நூலை வெளியிட்டனர்.

வல்லி பரதத்தில் எட்டயபுரம் அரண்மனையின் ஒரு பகுதியின் சிறப்பை அறியலாம்.

வாசலது வாசல் மகாராசன் வாசல்
எங்கள் துரைஜெக வீரராமகுமார எட்டேந்திரன்
மங்களஞ் சேர் கல்யாண மால் நிறைந்த வாசல்
சதுரொடு தம்பூரு வீணை சதி சுதியோடு
இசைப்ப நல்ல
சதுரி தென மன மகிழும் சபை நிறைந்த
வாசலது
கலை மதி காத்திடச் சகல கலை ஞோர்க்கும் விலை
மதியாக்
கலைவெகுமானம் செய் நித்யகல்யாண வாசலது

## 13. தாதா மகாராசாவும் பிள்ளைகளும்

கி. பி. 1899ல் தாதா மகாராசா பட்டம் பெற்றார்கள் இவர்சபையில் தான், தேசீய கவி சுப்பிரமணிய பாரதியாரும் ஆஸ்தான கவிஞராக பணியாற்றினார். இவர் தமிழ் ஆங்கிலம் தெலுங்கு ஆகிய மூன்று மொழியும் பழுதற பயின்றவர். கலையும் கல்வியும் இவரது உடலாக உயிராக இருந்தது. இவரிடம் பரிசு பெற்றவர்தான் நாடக ராசா எம். ஆர். கோவிந்தசாமி. நாடகக் கலைஞர் இவர். இனி நாட்டிய ராணிகள் பலர் இங்கு இருந்தனர் உலகம்மாள் என்ற வனிதா மணியின் நடனம் பலமுறை இங்கு நடைபெற்றது உண்டு.

பாவம், ராகம் தாளம்இவை மூன்றின் ஒரு சேர்ந்த பிறப்பே பரதம் என்று ஆன்றோர்கள் கண்ட, கொண்ட முடிவு. இதனை உலகம்மாள் சீரும் சிறப்புமாக மேன்மையாக செய்து வந்தனள். அரசரிடம் பல பரிசுகளும் பெற்றனள்.

சிலப்பதிகாரம் படித்தால் சோழன் கரிகால் பெருவளத்தான் சபையில் மாதவி ஆடினாள். பாடினாள். அவளைக் கூடினான் கோவலன், ஆயிரத் தொரு பொன் கொடுத்து என்று படிக்கிறோம். இதே போல தாதா மகாராசா அவர்கள் சித்திர நாட்டியம் ஆடிய பொன்னம்மாளைப் பாடிப் பரிசு பெற்ற சம்பவம் சபாரஞ்சித சிந்தாமணி என்ற நூலில் உள்ள பாடல்.

விசித்திர நடம் சொல்லபட்டி சமஸ்தான
கோதை பொன்னம்மாளிவட்கே—கூடும்
என்பதுணர்ந்து
பொருத்தமாய் வெங்கடேசு ரெட்டேந்திர
மகாராசன்
பொன் பூ முதல்வேண தெல்லாம்
கொடுத்ததனை
எங்கேனும் கண்டதில்லை

என்று ஏற்றிப் போற்றுகிறது இவரது வழித்தோன்றல் இருவர் பற்றிய வரலாறுகள்.

## 14. தங்கசாமிப் பாண்டியன்

இவர்கள் 28-9-1928 அன்று பட்டம் பெற்றார்கள். இவர்களது ஆர்வம், விளையாட்டுக் கலையில் ஈடுபட்டது. இளைஞர் பலரைச் சேர்த்து சண்டைக்கும்மிஎன்றகும்மி தயாரித்தனர். ஒரு நிற உடுப்புகள் போட்டு பாடி அவர்கள் அப்பியாசம்செய்வர். பார்ப்பதற்கு அழகாக இருக்கும். பல புதிய புதிய கட்டடங்களைக் கட்டினார்கள். கோவில்பட்டியில் ஒரு புதிய அரண்மனை நிறுவினார்கள். கோவில்பட்டி எட்டயபுரம் 9 மைல் தூரம். இதற்குத் தனியாக தொலை பேசி அமைத்தார்கள். குதிரைகள், ஒட்டகங்கள் முதலியன இருந்தன. சாரட்டு வண்டிகளும் புரிய கார்களும் வந்தன. 27-5-1934ல் இறைவனடி சேர்ந்தார்.

மதிப்புரை

## உழைக்கும் கரங்கள்

[ஆசிரியர் : டி என். சுகி. சுப்பிரமணியன் — வெளியீட்டகம் : தமிழ் எழுத்தாளர் சங்கம் லிமிடெட் — பக்கங்கள் : 215 — விலை ரூ. 4—20.]

சுகி. சுப்பிரமணியன் தமிழ் இலக்கிய உலகிற்கு நன்கு அறிமுகமானவரே. புதினங்கள், சிறுகதைகள், நாடகங்கள் இவற்றை தனக்கே உரிய எளிய நகைச்சுவையுடன் எழுதுபவர். ஆசிரியர் இப்புதினத்தின் முன்னுரையில் தன் இலக்கிய வாழ்வைத் திரும்பிப் பார்க்கிறார். "கதைக்காக, கதைச் சுவைக்காக எழுதிய நாவல்களைக் கண்டேன்" என்று காணும் தன் நூல்களையே. ஆசிரியர் இந்நூலை அவ்வழியிலேயே எழுதாமல் "இந்நாவல் வாழத் துடிக்கும் மனித மனங்களை — பொருளாதார அந்தஸ்து இல்லாததால் படுகின்ற பாட்டினைத்தான் முழுவதும் சொல்லுகிறது. கிடைத்ததை மட்டும் பிச்சைக்காரத்தனமாக ஏற்றுப் பெருவாழ்வு வாழ்வதாக எண்ணுதபடி நம் வருங்காலத்திய சமுதாயத்திற்குக் கிடைக்கவேண்டிய பிரபுத்துவத்துக்க்காகப் போராடும் மனிதப் போராட்டத்தையே இச்சிறு நாவலில் நான் சித்தரித்துள்ளேன்" என்று கூறி ஒரு நல்ல குறிக்கோளோடு முனைந்திருக்கிறார். இத்தகைய ஒரு கொள்கை இலக்கியத்தை 'பிரச்சார இலக்கியம்' என்று முத்திரை குத்தி ஒதுக்குதலும் கூடும் என்பதை அறிந்திருக்கிறார். "நீண்ட நெடிய காலத்தின் பிடிக்குள் சிக்கிய காரணத்தால் இதிகாசங்களும், புராணங்களும், சிற்ப சித்திரங்களும், தாம் பெறவேண்டிய பெருமையையும், புகழையும் விட அதிகமான கியாதியைப் பெறுகின்றன" என்று ஆசிரியர் கூறும் கருத்து நம் உள்ளத் தெளிவை வளர்க்கின்றது. இலக்கியம் குறிக்கோளோடு விளங்க வேண்டும் என்று முனைந்திருப்பது நம் பாராட்டுக்கு உரியதாகும்

ராகவேந்திரன் என்னும் பட்டம் பெற்ற இளைஞன் நெசவாளர்களுக்கான கூட்டுறவு சங்கம் காண முனைந்து ஈடுபடுகிறான். முதலாளிகளான மோகனரங்கமும், கண்ணப்பரும் இம்முயற்சியை வெற்றி பெறாமல் தடுக்க முயல்கின்றனர். இவர்கட்கு உறுதுணையாய் இருப்பவர் தரகர் சந்திரகாந்தம். ராகவேந்திரனுக்கு ஒரு அச்சக உரிமையாளரும் ஒரு டாக்டரும் துணையாய் இருப்பதோடு முதலாளி மோகனரங்கத்தின் ஒரே மகள் திலகமும் காதலியாய் இருந்து துணைபுரிகிறாள். இப்போராட்டத்தை இயல்பாக சித்தரிப்பதுதான் கதை. திலகத்தை முதலாளி மோகனரங்கம் பெருஞ்சினத்தில் அடிக்க அதனால் இறுதியில் இறந்துபடுகிறாள். ராகவேந்திரனை சந்திரகாந்தம் வலைவீசிப் பிடிக்கிறார். இறுதியில் ராகவேந்திரன் சூழ்ச்சியை உணர்கிறான். தன் வாழ்வை கூட்டுறவின் வெற்றிக்காகவே படைக்கிறான். இதுதான் கதை.

ஆசிரியர் பொதுவாகக் கதையை சுவையாகவே கூறிச் செல்கிறார். எனினும் சூழ்ச்சிக்காரன் என்று நன்கு புரிந்துகொண்ட சந்திரகாந்தத்தை அவ்வளவு எளிதில் நம்பி, தந்தையையே ராகவேந்திரன் எதிர்ப்பதும், கூட்டுறவு பற்றியும் கவலைப்படாது பேசுவதும் தன் உயிர்க்காதலி உயிரோடு மன்றாடும் நிலையிலும் பல நாட்களாகக் காணவேண்டும் என்ற நினைவே இல்லாமல் இருப்பதும், முன்னே வலிய வந்து உதவிய கமலவேணி அம்மையார் சந்திரகாந்தத்தின் சூழ்ச்சியின்படி உடனே பணத்தைத் திருப்பிக்கேட்பதும் இயல்பாகவுமில்லை; அந்தப் பாத்திரங்கட்குப் பொருத்தமாகவுமில்லை. சந்திரகாந்தம் பாத்திரம் நன்கு உயிர்த்தன்மையோடு உலவக் காண்கிறோம். பொதுவாக படிப்போர் எதிர்பார்க்கும் வகையில் திலகம் கடைசி கட்டத்தில் உயிர் பிழைப்பதாகவும் இராகவேந்திரனை மணக்க அந்நிலையில் முதலாளி மோகனரங்கம் இசைவதாகவும் இல்லாமல் அவள் இறப்பதாகவும் பின்னரும் முதலாளி அதே நிலையில் இருப்பதாகவும் காட்டியுள்ளது இயல்பாய் உள்ளது.

கூட்டுறவின் சிறப்பு கூறும் நோக்கம் இப்புதினத்தில் வெற்றி பெற்றிருக்கிறது. ஆசிரியரிடம் இயல்பாகக் காணும் நகைச்சுவையை ஏனோ இந்நூலில் காண இயலவில்லை. படிக்க வேண்டிய புதினங்களில் இது ஒன்று என்பதோடு, ஒரு பொருளாதார பிரச்னை பற்றிய புதினம் என்பதிலேயும் இதன் ஆசிரியர் பெருமை கொள்ளலாம். —மணி மாறன் M. A.

## கொங்கு நாட்டுக் கோயில்கள்

[ஆசிரியர் : சிவகளை மு. சுப்பையா-வெளியீடு : தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட், சென்னை-8 — பக்கங்கள் 300. —விலை ரூ. 6.]

விரைந்து செல்லும் ஊர்திகள் உலகையே சிறியதாக்கிவிட்டன. மக்கள் நாளுக்குநாள் நாடு கடந்து மிகுதியாகப் பயணம் செல்லுகின்றனர். இத்தகைய பயணங்கள் மக்கள் பிறரைப் பற்றி அறியப் பெரிதும் உதவுகின்றன.

பண்டைநாளில் நம் நாட்டில் இமயம் முதல் குமரிவரை இந்து சமயத்தைச் சார்ந்தவர்கள் புனித நீர்களில் நீராடவும் சிறந்த கோயில்களைக் காணவும் பயணம் செய்தனர். இப்பயணங்கள் நம் இந்திய நாட்டின் பல்வேறு பகுதிகளில் வாழும் மக்கள் ஒருவரையொருவர் அறியப்பெரிதும் பயன்பட்டன. ஆனாலும் இத்தகைய பயணங்களை சிலரே மேற்கொண்டனர்.

நம் நாட்டுக் கோயில்கள் சிற்பக்கலையின் சிறப்பைக்காட்டும் இடங்களாக விளங்குகின்றன. பக்தி உணர்வற்றவரும்கூடக் கலைக் கண்ணோட்டத்தோடு கோயில்களைக் காண விழைகிறார்கள். ஆசிரியர் இந்நூலில் கொங்குநாட்டுக் கோயில்களுக்கு நம்மை அழைத்துச் சென்று உடன் இருந்து ஒவ்வொரு கோயிலின் முன்னைய வரலாற்றினையும், சிற்பச் சிறப்பினையும் பக்தி உணர்வோடு விளக்குகிறார். இவ்வாறு நமக்கு 27 கோயில்களை அறிமுகப்படுத்துகிறார்.

ஆசிரியர் ஆங்காங்கே பொருத்தமான இடங்களில் பண்டைய இலக்கிய நூல்களிலிருந்தும் புராணங்களிலிருந்தும் பாக்களை எடுத்துக் கையாண்டுள்ளார்; சிற்பக்கலை நுணுக்கங்களை விளக்குகிறார்; மலைவாழ் மக்களின் மொழிபற்றிய ஆராச்சியிலும் ஈடுபடுகிறார்; இயற்கையழகிலும் மனம் தோய்கிறார். சிற்பங்களை பல்வேறு கோணங்களில் நிழற்படம் பிடித்து நம்மையும் காணச் செய்யும் ஆசிரியரின் முயற்சி, அச்சுத்தாள் படத்திற்கேற்ப உயர்ந்ததல்லாமையில் படம் தெளிவின்றி அமைந்து, வெற்றிபெறாமல் போகிறது. அடுத்த பதிப்பிலேனும் படங்களை நல்ல தாளில் அச்சிடுவாராக.

இதைப்போன்று நம் கலைச்செல்வத்தைக் காட்டும் நூலை பிறநாட்டுப் பகுதிகளுக்கும் எழுதினால் தமிழகத்தின் கலைச் செல்வத்தை அறிய மக்களுக்குப் பெருந்துணைபுரியும் என்பதில் ஐயமின்று. மணி மாறன் M. A.

---

## வேண்டுகோள்

பேரன்புடையீர், வணக்கம்.

தமிழக இளம் எழுத்தாளர்களின் முகவரியுடன் வாழ்க்கைக் குறிப்பை இணைத்து "இளம் எழுத்தாளர்" என்ற நூல் வெளியிட இருக்கிறோம்.

இதில் தாங்களும் இடம் பெற்றுப் பலருக்கும் அறுமுகமாகி முன்னேற்றம் பெற விழைகின்றோம்.

தங்களின் பெயர், அகவை (வயது), படிப்பு, தொழில், பொழுதுபோக்கு, எழுத்துத்துறையில் ஈடுபட்டுள்ள விளக்கம், படைப்புக்கள், வெளிவந்த இதழ்களின் பெயர்கள், குறிக்கோள் ஆகியவற்றைப்பற்றி முழுத்தாளில் (டெம்மி) ஒரு பக்கத்திற்கு மிகாமல் எழுதியனுப்பவேண்டும்.

இத்துடன் ரூபாய் 3-ஐ (மூன்றையும்) இணைத்தனுப்பவேண்டும். இப்பணத்திற்குரிய "இளம் எழுத்தாளர்" நூல் தங்களுக்கு அனுப்பிவைக்கப் படும். பணம் பெற்றுக்கொண்டதற்கு பற்றுச்சீட்டு உடனே அனுப்பிவைக்கப் படும்.

அன்புள்ள,

ஆசிரியர், "பூஞ்சோலை"

காரைக்கால்.

---

பாதாம்போஜாம் ஸ்ப்ருசதி பஜதே
ரங்கநாதஸ்ய ஜங்காம்
ஊரு த்வந்த்வே விலகதி சனை
ரூர்த்வ மப்யேதி நாபிம் |
வக்ஷஸ்யாஸ்தே வலதி புஜயோர்
மாமிகேயம் மநீஷா
வக்த்ரா பிக்க்யாம் பிபதிவஹதே
வாஸநாம் மௌளிபந்தே ||

காந்தோதாரை ரயமிஹ புஜை :
கங்கண ஜ்யா கிணங்கை :
லக்ஷ்மீதாம்ந : ப்ருதுளபரிகைர்
லக்ஷிதாபீதி ஹேதி : |
அக்ரே கிஞ்சித் புஜக சயந :
ஸ்வாத்மநைவாத்மந : ஸந்
மத்யேரங்கம் மமச ஹ்ருதயே
வர்த்ததே ஸாவரோத : ||

ரங்காஸ்த்தாநே ரஸிக மஹிதே
ரஞ்ஜிதாசேஷ சித்தே
வித்வத் ஸேவா விமல மநஸா
வேங்கடேசேந க்லுப்தம் |
அக்லேசேந ப்ரணிஹிததியா
மாருருக்ஷேர் ரவஸ்த்தாம்
பக்திம் காடாம் திசது
பகவத் த்யாந ஸோபாந மேதத் ||

திருவரங்கன் திருவடிச்செங் கமலத் துற்றுச்
சிறந்துள முன் காலினிலே சேவை செய்தே
இருதொடையில் நன்றாகப் படிந்து மேலே
எழிலுந்திக் கமலத்தை நெருங்கிச் சார்ந்து
குருமணியார் திருமார்பில் வைகி நீண்டு
கொடைவழங்கு திருக்கரங்கள் மிசையே சுற்றி
அருளொளியைத் திருமுகத்தில் பருகிச் சென்றே
அணிமுடியில் பதிவுற்ற தென்னன் னெஞ்சே!

கரவளைநாண் தழும்புமிக அழுந்தப் பெற்றுக்
கவின்பொருந்திக் கொடைவழங்கு சிறப்பைக் கொண்டு
திருவளரும் கோவிலுக்குத் திண் தாழ்க்காப்பாம்
திருக்கரங்கள் காப்பளிக்கப் படைகள் தாங்க
அரவணையில் கண்வளரும் அரங்கத் தம்மான்
அருகுறமுன் நம்பெருமாளாகத் தோன்றி
உருவளரும் நாச்சியார்கள் உடனுய் என்னல்
உள்ளத்தும் அரங்கத்தும் உறைகின் றானே!

உற்றவர்கள் உளமகிழ, சுவைப்போர் போற்ற
ஒளிர்கின்ற ஸ்ரீரங்க நகரில் வாழும்
கற்றவர்கட் கடித்தொண்டு மிகவும் செய்து
கறையற்ற மனம்பெற்ற வேங்க டேசன்
சொற்றபக வத்தியான சோபா னந்தான்
தூயபெரு யோகியரின் நிலையை எய்திப்
பற்றுகிற பற்றுடையோர்க் கெளிதில் ஏறும்
படியாகத் திடபக்தி நல்கு மம்மா!

# வாழை மரமும்–வாழ்வும்

சுபகாரியங்களுக்கு வாசலில் வாழைமரம் கட்டுகிறோம். தார் போடாத வாழைமரம், தனி மனிதனைக் குறிப்பதாகும். தார் போட்ட வழைமரம் ஒரு குடும்பஸ்தனைக் குறிக்கும்.

வீட்டுக்கு வரும் விருந்தாளிகளை இருகரம் கூப்பி தலை வணங்கி வரவேற்பு குடும்பஸ்தன் கூற வேண்டும் அல்லவா? அவன் பிரதிநிதியாக வழைமரம் இரு தார்களையும் தனது கரங்களாகக் கூப்பித் தலைவணங்கி வருகிறவர்களை யெல்லாம் வரவேற்கிறது.

குடும்பஸ்தன் வாழையைப் போல் பிறருக்கு உதவி, தியாகியாக வாழவேண்டும் என்பதை ஒவ்வொருவருக்கும் வாழை நினைவூட்டுகிறது.

தன் குடும்பத்தாரிடம் தான் பெறுவது சிறிதுதான் என்றும், ஆனால் உதவுவது அதிகமாக உதவி வாழ வேண்டும் என்பதையும் வாழைமரம் குறித்துக் காட்டுகிறது.

ஒரு குடும்பஸ்தன் பொறுப்புடன் தலைவணங்கி விட்டுக்கொடுத்து அமைதியுடன் வாழவேண்டும் என்பதையும் வாசலில் கட்டும் வாழைமரம் அனைவருக்கும் நினைவூட்டுகிறது.

வாழ்க்கையின் மிக நுட்பமான தத்துவத்தையெல்லாம் வாழைமரம் மக்களுக்கு தான் வாழ்ந்து விளக்குவதால் அவையத்தில் அதனை முந்தியிருக்கும்படி வாசலின் முகப்பில் வாழைமரம் கட்டப்படுகிறது.

எத்தனை நாள் வாழ்ந்தாலும் எத்தனை குழந்தைகளைப்பெற்றாலும், தலை தாழ்த்தாத சிலரை மரம் என்று உலக வழக்கில் சொல்கிறோம்.

ஆனால் வாழை மரத்தின் நுட்பங்களைப் புரிந்தபின் அத்தகைய மனிதர்களை மரம் என்று சொல்வது கூட தவறு என்பது புரிகிறதல்லவா?

தலை, வணங்குவதற்கே மனிதனுக்குப் பயன்படுமாறு அமைக்கப்பட்டிருக்கிறது. தலைவணங்காதவர்களை "வணங்காமுடி" என்று அழைப்பதும் தமிழ் மரபு. தலை வணங்காதவர்களை நாட்டுக்கல் என்று சொல்லலாம்.

வாழை நமக்குக் கற்றுத்தரும் வாழ்வின் ரகசியத்தைப்புரிந்தால் மனிதப்பிறவியில் நாம் உன்னத நிலையை அடைய முடியுமல்லவா? சிந்தித்துப் பாருங்கள்.

ரெட்டியார்

Edited & Published by the owner A. V. R. Krishnaswamy Reddiar & Printed by him at his Kannan Press,
24, Theradi Bazaar, Tiruchirappalli-2.